www.tamilarangam.net





**ஈழமும் இந்தியாவும்-15: பயிற்சி முடிந்து யாழ். திரும்பிய போராளிகள்**



ஈழப் போராளி அமைப்புக்களு இந்திய ஆயுதப் பயிற்சிகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். ஒரு புறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளுக்கு உத்தர பிரதேசத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சிகளை வழங்க, மற்றொரு புறத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கு இந்திய இராணுவ அதிகாரிகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

**ஈழமும் இந்தியாவும்-14: றோ அதிகாரியை சந்திக்க அவசரமாக தமிழகம் வந்த பிரபாகரன்**



இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பயன்படுத்திக் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் தலைமையைத் தான் எடுத்துக்கொள்வதற்காக சந்திரஹாசன் வகுத்துவைத்திருந்த திட்டம் அன்டன் பாலசிங்கத்துக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்தது. இது சந்திரஹாசனின் திட்டமாக மட்டுமன்றி றோவின் ஒரு பகுதியினரும் இதனை விரும்பியிருப்பதற்கான ஏதுநிலைகளும் காணப்பட்டன.

More:

ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..
ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்



# ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..

ஞாயிற்றுக்கிழமை, 20 மார்ச் 2011 00:00

SHARE



தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சிகளைக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டுள்ளது என்பது பற்றிய தகவல்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்குக் கிடைத்த போது அவர் வன்னிக் காட்டுப் பகுதியில் இருந்தார்.

வன்னிக் காட்டுப் பகுதியில் ஒருங்கமைக்கப்பட்ட இராணுவப் பாசறைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளுக்கு அப்போது அவர் பயிற்சியளித்துக்கொண்டிருந்தார். 1983 ஆகஸ்ட் நடுப்பகுதியில்தான் இந்தத் தகவல்கள் பிரபாகரனுக்குக் கிடைத்தது. அப்போது ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் பெருந்தொகையானவர்களை இணைத்து இராணுவப் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இது தொடர்பான தகவல்களும் பிரபாகரனுக்கு உள்ளூரிலிருந்து கிடைத்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு பெருமெடுப்பில் தலையிடுவதற்குத் தீர்மானித்திருப்பதால், விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பம் ஒன்று ஏற்படும் என்பதை உணர்ந்துகொண்ட பிரபாகரன், இந்தப் பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு இணைத்துக்கொள்ளப்படாதது ஏன் எனவும் ஆச்சரியப்பட்டார்;. ஏனைய அமைப்புக்களின் தலைவர்கள் அநதக் காலப்பகுதியில் இந்தியாவில் தங்கியிருந்த அதேவேளையில், பிரபாகரன் மட்டும்தான் களத்தில் நின்று இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்துக்கொண்டும், பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கமைத்துக்கொண்டும் இருந்தார். இதன் காரணமாகத்தான் விடுதலைப் புலிகள் அமைப்பிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாக இருந்த போதிலும், அவ்வமைப்பு இராணுவத் தாக்குதல்களை முன்னெடுப்பதில் செயற்திறன்மிக்கதாக இருந்தது.

இந்தப் பின்னணியில் ஏனைய இயக்கங்களுக்கு இந்தியா ஆயுதங்களையும் ஆயுதப் பயிற்சிகளையும் வழங்குவது விடுதலைப் பலிகள் அமைப்பைப் பாதிப்பதாக அமையும் என்பதை கவனத்திற்கொண்ட பிரபாகரன், இந்தப் பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் இணைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஒரு அலுவலகம் கூட தமிழகத்தில் இல்லாத அந்த வேளையில், தமிழகத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் ஒருசிலரே அங்கிருந்து செயற்பட்டுவந்தனர். இந்த நிலையில் இந்திய அரச அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி விடுதலைப் புலிகள் அமைப்பையும் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு தமிழகத்தில் விடுதலைப் புலிகள் சார்பாகச் செயற்படக்கூடிய முக்கியஸ்த்தர்கள் யாராவது இருப்பது அவசியம் ; எனக்கருதிய பிரபாகரன், அன்டன் பாலசிங்கம்தான் இதற்குப் பொருத்தமானவராக இருப்பார் எனவும் மதிப்பிட்டார்.

அன்டன் பாலசிங்கம் அப்போது லண்டனில் தங்கியிருந்தார். அவருடன் தொடர்பு கொண்ட பிரபாகரன், இந்தியா மேற்கொண்டுள்ள இராணுவப் பயிற்சித் திட்டம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கும் அந்தப் பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக உடனடியாக சென்னை சென்று உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். அன்டன் பாலசிங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் அவருக்குப் புதிதல்ல. 1979 ஆம் ஆண்டில் முதலிலும், 1981 ஆம் ஆண்டில் பின்னரும் தமிழகத்தில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளுடன் இணைந்திருந்த அனுபவம் அவருக்கு இருந்தது. 1979 ஆம் ஆண்டில்தான் முதல் தடவையாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை அவர் சென்னையில் சந்தித்திருந்தார். அன்று முதல் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டுவந்த பாலசிங்கம் பிரபாகரனின் பெரும் அபிமானத்தைப் பெற்றவராகவே இருந்தார்.

பிரபாகரனின் உத்தரவையடுத்து உடனடியாகவே லண்டனிலிருந்து பாலசிங்கம் தன்னுடைய மனைவியான அடேலுடன் சென்னை புறப்பட்டார். தன்னுடைய இந்த விஜயம் சற்று கடினமான ஒரு பணியை மேற்கொள்வதற்கானது என்பதையும், தொடர்டச்சியாக சென்னையில் தங்கியிருந்து முக்கிய பணிகளைத் தொடர வேண்டியிருக்கும் என்பதையும் பாலசிங்கம் உணர்ந்திருந்தார். அதற்கான ஆயத்தங்களுடனேயே அவர் சென்னை புறப்பட்டார். தமிழகத்தில் அவரது பணி எவ்வாறு அமைந்திருந்தது என்பதையிட்டு தன்னுடைய 'போரும் சமாதானமும்" என்ற நூலில் முக்கியமான குறிப்புக்களை அவர் எழுதியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுளவைகளை இங்கு தருவது பொருத்தமானதாக இருக்கும்:

'1983 ஆகஸ்ட் நடுப்பகுதியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நாம் வந்திறங்கிய போது விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியம் எம்மை வரவேற்றார். சென்னை நகரில் 'வூட்லன்ட்ஸ்' எனப்படும் நடுத்தரமான சைவ விடுதியில் நாம் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நேசன் மற்றும் மூத்த உறுப்பினர்கள் சிலரும் எம்மை அங்கு சந்தித்தனர். அவ்வேளையில் சென்னையில் எமது இயக்கத்துக்கெனச் செயலகமோ இரகசிய வீடுகளோ இருக்கவில்லை. எமது அறைக்குப் பக்கமாக இன்னோர் அறையை எடுத்து அவ்விரு அறைகளையும் அரசியல் செயலகமாக மாற்றி சிறிதுகாலம் அவ்விடுதியிலிருந்தே செயற்பட்டோம்.

பேபி சுப்பிரமணியத்தின் நண்பரும், அ.தி.மு.க. ஆட்சியில் மூத்த அமைச்சருமான காளி முத்து நாம் ஒரு செயலகம் அமைக்கும் வரை விடுதியின் செலவீனங்கள் அனைத்தையும் பொறுப்பெடுத்தார். அந்த விடுதியில் இருந்தபடியே இந்திய இராணுவப் பயிற்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுக்குத் தகவல்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

அவ்வேளை, எனக்கு முன்பு அறிமுகமான தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரைச் சந்தித்த போது அவரிடமும் இந்தியப் பயிற்சித் திட்டம் தொடர்பாகக் கேட்டேன். இந்தியப் புலனாய்வுத் துறையினராகிய றோ தான் இந்தப் பயிற்சித் திட்டத்தைப் பொறுப்பேற்று நடத்துவதாகத் தெரிவித்த அந்தப் பத்திரிகையாளர், என்னை றோ அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு ஆலோசனை தெரிவித்தார். அவ்வேளையில் சென்னையில் றோ அதிகாரிகளின் செயற்பாடுகள் மிகவும் இரகசியமாகவே இருந்தமையால் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது சிரமமானதாக இருந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் எனக்கு முன்பு அறிமுகமான கலாநிதி இராஜேந்திரனைச் சந்தித்தேன். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜேந்திரன் எமது இயக்கத்தின் ஆதரவாளர். சிங்கப்ப+ர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தின் முழு விபரங்களுடனும் வூட்லன்டஸ் விடுதிக்கு வந்து என்னைச் சந்தித்தார்.

சிந்தனைத் துளிகள்

**"மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம், அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்."**

**-தேசியத் தலைவர்**



**லசந்தவின் மரணத்தின் பாதை : அரசு கிளப்பும் புதிய சர்ச்சை**




இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருக்கின்றதா? அல்லது இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையில் அவரை மாட்டிவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் ஈரோஸ் ஆகிய மூன்று அமைப்பக்களுக்கும் இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தில் அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், இந்த அமைப்புக்களைச் சேர்ந்த போராளிகள் ஏற்கனவே வட இந்தியாவிலுள்ள பயிற்சி முகாம்களுக்குச் சென்று கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்தியப் புலனாய்வுப் பிரிவினரே இந்தப் பயிற்சித் திட்டத்துக்குப் பொறுப்பாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். காலஞ்சென்ற தந்தை செல்வாவின் மகன் சி.சந்திரஹாசனே இந்தப் பயிற்சித் திட்டத்துக்குப் பொறுப்பாக இருக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சந்திரஹாசனுக்கு முக்கிய தலைமைப் பொறுப்பைப் பெற்றுக்கொடுப்பதே இந்தியப் புலனாய்வுத் துறையினரது இரகசியத் திட்டம் என்பதையும் இராஜேந்திரன் தெரியப்படுத்தினார். இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்துக்கு விடுதலைப் பலிகள் அமைப்பையும் சிபார்சு செய்ய சந்திரஹாசன் தயாராக இருக்கின்றார் எனக் கூறிய இராஜேந்திரன், அதற்கு ஒரு முக்கிய நிபந்தனை உள்ளது எனவும் குறிப்பிட்டார். அந்த நிபந்தனை என்ன எனக் கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் எனக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும், மறுபுறம் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

அதாவது தமிழத் தேசிய இயக்கத்தின் தலைவராக சந்திரஹாசனை பிரபாகரன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இந்திய இராணுவப் பயிற்சி முடிவடைந்ததும், எல்லாத் தமிழ்ப் போராளி அமைப்புக்களும் தமிழ்த் தேசிய இராணுவம் ஆக மாற்றப்படும் எனவும், அந்தத் தமிழ் இராணுவம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் வேளையில் தமிழ்த் தேசத்தின் அரசியல் போராட்டத்தை சந்திரஹாசன் தலைமை தாங்கி நடத்துவார் எனவும் இராஜேந்திரன் குறிப்பிட்டார்."

இவ்வாறு பாலசிங்கம் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிபந்தனையல்ல. அதேவேளையில் இந்தியப் புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் சந்திரஹாசனைத் தலைவராகக் கொண்டுவருவதற்கான திட்டம் ஒன்றையே இந்த நிபந்தனை கொண்டிருந்தது. இந்த நிலையில் விடுதலைப் பலிகளுடைய பிரதிபலிப்பு எவ்வாறானதாக அமைந்திருந்தது என்பதையும் இதற்கு மாற்றாக விடுதலைப் பலிகள் கையாண்ட உபாயங்கள் என்ன என்பதையும் எமது அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

பூராயத்துக்காக
**சிவயோகன்**

Add Comment

இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது (ஞாயிற்றுக்கிழமை, 03 ஏப்ரல் 2011 10:02)

**மும்பையில் மகிந்தருக்கு கிடைத்த இரட்டைத் தோல்வி: புலனாய்வுத் தகவல்கள்**



உலகக் கிண்ணத்துக்க கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்தது என்பதைவிட, இந்தப் போட்டியின் போது இந்தியாவினால் இலங்கை-குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்ட முறையில் அவமானப்படுத்தப்பட்டதுதான் கொழும்புக்குப் பெரும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இந்தியாவால் அவமானப்படுத்தப்பட்டதை சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திண்டாடுகின்றது இலங்கை அரசு.

More:
யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவு: வடக்கின் வசந்தம் தந்த பரிசு
கூட்டமைப்பின் 'தீர்வுப் பொதி': அரசைத் திருப்திப்படுத்தவா?
லிபியா நனைகிறது என்று இலங்கை அழுகிறது

இணைப்புக்கள்

**தமிழ்ச் செய்திகள்**
ஈழநேசன்
மீனகம்
யாழ் இணையம்
பி.பி.சி தமிழோசை
லங்காசிறி
செய்திகள்
தமிழ்வின்
மனிதன்
2 தமிழ்
அதிர்வு
சரிதம்
புதினம்நியூஸ்
புதினப்பலகை
இன்போ தமிழ்
தமிழ்ஸ்பை
வன்னிஒன்லைன்
தமிழ்உலகம்
தமிழ்சிஎன்என்
சங்கதி
பதிவு
ஈழம் பிறஸ்
யுகே தமிழ்நியூஸ்
தமிழ்த்தாய்
தமிழ்ச்செய்தி
தாய்நிலம்
ஈழம்வெப்

**ஆங்கிலச் செய்திகள்**
TamilNet
TamilNational
DailyMirror
SundayTimes
SundayLeader
Nation
LakbimaNews
TheBottomLine
TamilWeek
LankaPage
ColomboPage
TheAcademic
TamileelamNews
TamilCanadian
UKTamilNews
Sangam
TorontoTamil
Reuters
MSNBC
Yahoo
BBC
Google
Worldnews
CNN

**இணைய சஞ்சிகைகள்**
ஈழநேசன்
அப்பால்தமிழ்
தெனாலி
தமிழில் கல்வி
தமிழ்சினிமா
பதிவுகள்
தமிழ்
அப்புசாமி
சினிசவுத்
கோல்டன் தமிழ்
நெற்தமிழ்
மங்கையர் மலர்
வெப் தமிழன்
திண்ணை
தமிழோவியம்
சுரதா
காலச்சுவடு
கூடல்
வார்ப்பு
நெய்தல்
கவிமலர்
தமிழோசை
எழில்நிலா
ஈழம் வோல்பேப்பர்ஸ்
தமிழம்
தமிழ்மணம்
தமிழ்வாணன்
முத்தமிழ்
தமிழமுதம்
நிலாசாரல்
த தமிழ்
உயிர்மை

**தமிழ் பத்திரிகைகள்**
வலம்புரி
வீரகேசரி
தினக்குரல்
உதயன்
விகடன்
சுடர் ஒளி
குமுதம்
தினகரன்
தினத்தந்தி
விடுதலை
தினபூமி
தினமணி
மாலைச்சுடர்
தினமலர்

**தொலைக்காட்சிகள்**
வளரி வலைக்காட்சி
ஜிரிவி
மக்கள் தொலைகாட்சி
விஜய் தொலைக்காட்சி
தமிழன் தொலைகாட்சி
தமிழ் விஷன்
தீபம்
குறள் தொலைகாட்சி
ஐரோப்பிய தொலைகாட்சி
ரிவி வண்
திரைப்படம் பார்க்க

**இணைய வானொலிகள்**
புலிகளின் குரல்
தமிழர் குரல்
ஐபிசி தமிழ்
பிபிசி தமிழ்
சிரிஆர் வானொலி
தமிழ்ஸ்ரார்
வெற்றி
சிரிபிசி
தமிழ் எப்எம்
கனேடிய தமிழோசை
சிஎம்ஆர் பண்பலை
தமிழ் எப்எம்
கீதவாணி
ஏரிபிசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாலைமலர்
கல்கி
நக்கீரன்

சக்தி எப்எம்
சூரியன் எப்எம்
ஒலி

எம்ரிஆர் வானொலி
தமிழ் ஒலி
உலக தமிழோசை

Copyright © 2011 Pooraayam.com, All Rights Reserved.

மீனகம் Home | TamilsNews | World | Enews | Forum | Cinema | Pathivukal | Donate

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்